**<u>உதவி அமர்வு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
உதவி அமர்வு மற்றும் சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.96/2021</u>**

<u>(நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, உசிலம்பட்டியின் முதல் நிலை பதிவேட்டு எண்.20/2020)</u>

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக, செக்காணூரணி காவல் ஆய்வாளர் அவர்கள், செக்காணூரணி காவல் நிலைய குற்ற எண்.378/2018–ன் மூலம். |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | **1)** தேவராஜ் (38/2018),<br>த/பெ. வைரவன்,<br>பாலுத்துப்பட்டி,<br>வடக்கம்பட்டி,<br>கருமாத்தூர்,<br>உசிலம்பட்டி தாலூகா,<br>மதுரை மாவட்டம்.<br>**2)** தம்பிராஜ் (42/2018),<br>த/பெ. காமராஜ்,<br>கருப்பசாமி கோவில் தெரு,<br>ராமநாதன் நகர்,<br>ஜக்கமநாயக்கன்பட்டி,<br>போடிநாயக்கனூர் தாலூகா,<br>தேனி மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரிகள் 4(1–A), 4 (1) (aaa) TNP Act மற்றும் இ.த.ச. பிரிவு 328–ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. | எதிரிகள் 4(1–A), 4 (1) (aaa) TNP Act மற்றும் இ.த.ச. பிரிவு 328–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது. | எதிரிகள் 4(1–A)–ன் கீழ் |

| | |
|---|---|
| தீர்வு. | எதிரிகள் இ.த.ச. பிரிவு 4 (1–A)–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்வு. |

இவ்வழக்கு என் முன்பாக, கடந்த 26.03.2026–ம் தேதி, இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, குற்றமுறையீட்டாளருக்காக, கற்றறிந்த அரசு வழக்குரைஞர் திரு.R.இராஜசேகர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக, கற்றறிந்த வழக்குரைஞர் திரு.V.கணேசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்:–

**தீ ர் ப் பு ரை:–**

**1)** கடந்த 21.11.2018–ம் தேதி காலை 6.30 மணிக்கு செக்காணூரணி காவல் நிலைய எல்லையான கருமாத்தூர் பாலூாத்துப்பட்டி மெயின் ரோட்டில் வடக்கம்பட்டி சுடுகாடு அருகில் TN 59 AF 2765 TVS STAR CITY என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தில் எதிரிகள் இருவரும் 750 ML அளவுள்ள SPEED BRANDY பாட்டில்கள் 169 மற்றும் 750 ML அளவுள்ள GREEN MAGIC BRANDY என லேபில் ஒட்டப்பட்ட பாட்டில் ஒன்றும், மூடி திறந்து மூடிய நிலையில் விஷ நெடியுடன் கூடிய மதுபோன்ற திரவம் நிறைந்த மொத்தம் 127.500 லிட்டர் புதுச்சேரி மாநில மதுபான பாட்டில்களை அதிக லாப நோக்கத்துடனும், மேற்படி திரவத்தை அருந்தினால் மனித உயிருக்கும், உடலுக்கும் தீங்கு விளைவிக்க கூடும் மற்றும் கண்களுக்கு எரிச்சலூாட்ட கூடும் என தெரிந்திருந்தும்

விற்பனை செய்ய வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் 4(1–A), 4 (1) (aaa) TNP Act மற்றும் இ.த.ச. பிரிவு 328–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய ஒன்று, என்று, குற்றமுறையீட்டாளரால், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, உசிலம்பட்டியில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2)** பின், ஷை குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பி.ஆர்.சி. எண்.20/2020–என, எண் கொடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு. 207–ன் கீழ், நகல்கள் வழங்கப்பட்டு, பின் இவ்வழக்கு, மேல் விசாரணைக்காக மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றம், மதுரைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, எஸ்.சி.எண்.96/2021–என, எண் கொடுக்கப்பட்டு, பின் அங்கிருந்து, இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, எதிரிகள் முன்னிலையானதும், அவர்களுக்கு வழக்கு நகல்கள், இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்து, இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், எதிரிகள் 4 (1–A) கீழ் குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்பதற்கு, போதிய முகநுட்ப ஆதாரங்கள் இருந்ததால், எதிரிகள் மீது, மேற்படி பிரிவின் கீழ், குற்றச்சாட்டு, வனைந்து, எதிரிகளிடம், குற்றம் பற்றி விளக்கிக்கூறி, வினவிய பொழுது, எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்கள்.

**3)** அதனால், அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதன் பேரில், அரசு தரப்பில், 6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) அரசு தரப்பு வழக்கும் மற்றும் சாட்சிய சுருக்கமும் பின்வருமாறு:–**

(i) அ.சா.1– ஜெயபாண்டியன் அவருடைய சாட்சியத்தில், கடந்த 21.11.2018 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு பயிற்சி சார்பு ஆய்வாளருடன் தானும், கிரேடு 1 முதல்நிலைக் காவலர் 624 இளையராஜாவும் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றோம் என்றும் அப்போது, கருமாத்தூர் பாலூத்துப்பட்டி மெயின்ரோட்டில் வடக்கம்பட்டி சுடுகாட்டிற்கு அருகே டி.என்.59 ஏஎப். 2765 என்ற டி.வி.எஸ். ஸ்டார் சிட்டி பைக்குடன் நின்றிருந்த எதிரிகளை விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணனாக பதில் சொன்னார்கள் என்றும் மேலும், விசாரிக்க எதிரிகள் இருவரும் பாண்டிச்சேரியிலிருந்து குறைவான விலையில் மதுபாட்டில்களை வாங்கி வந்து விசேசங்கள், பார்ட்டிகளுக்கு கொடுப்பதற்காக சுடுகாட்டிற்கு அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த சாக்குப் பையில்கட்டியிலிருந்த 750 எம்.எல். கொண்ட ஸ்பீடு பிராந்தி லேபிள் ஒட்டப்பட்ட 169 பாட்டில்களும், கிரீன் மேஜிக் லேபிள் ஒட்டப்பட்ட 1 பாட்டிலும் வைத்திருந்தார்கள் என்றும் எதிரிகள் இருவரும் அவற்றைப் பிரித்து விற்பனை செய்ய எடுத்துச்செல்ல வழிப்போக்கு வாகனத்திற்கு காத்திருந்ததாகச் சொன்னார்கள் என்றும் அனைத்து பாட்டில்களும் மூடி திறந்து மீண்டும் மூடிய நிலையில் இருந்தது என்றும் அதில் 2 பாட்டில்களை எடுத்து நுகர்ந்து பார்த்தபோது நச்சுத் தன்மை நெடிவாடை வந்தது என்றும் இதைக் உட்கொண்டால் உயிருக்கும், உடலுக்கும் ஆபத்து ஏற்படும் என்ற காரணம் கூறி எதிரிகள் இருவரையும் கைது செய்தோம் என்றும் 1–வது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்

என்றும் அதை ஆய்வளார் பதிவு செய்தார் என்றும் பொதுமக்கள் யாரும் இல்லாததால் தாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து சான்றுப் பொருட்களைக் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியிலும் தாங்களே கையொப்பம் செய்தோம் என்றும் மாதிரிக்காக 2 பாட்டில்களை வெள்ளைத் துணியில் கட்டி மதுரை, வட்டார தடய அறிவியலுக்கு அனுப்பினோம் என்றும் 10 மணிக்கு எதிரிகள் இருவருடனும், மற்றும் சொத்துக்களுடனும் நிலையம் வந்தோம் என்றும் குற்ற எண். 378/2018, பிரிவுகள் 4 (1) A, 4 (1) aaa TNP Act படியும் உடனிணைந்த பிரிவு 328 இதச படியும் சார்பு ஆய்வாளர் வழக்குப் பதிவு செய்தார் என்றும் ஆய்வளாருக்கு தாங்கள் உதவியாக இருந்தோம் என்றும் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) அ.சா.2– இளையராஜா அவருடைய சாட்சியத்தில், கடந்த 21.11.2018 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு பயிற்சி சார்பு ஆய்வாளருடன் நானும், முதல்நிலைக் காவலர் ஜெயப்பாண்டியும் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றோம் என்றும் கருமாத்தூர் பாலூத்துப் பட்டி மெயின்ரோட்டில் வடக்கம் பட்டி சுடுகாட்டிற்கு அருகே டி.என்.59 ஏஎப். 2765 என்ற டி.வி.எஸ். ஸ்டார் சிட்டி பைக்குடன் நின்றிருந்த எதிரிகளை விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணனாக பதில் சொன்னார்கள் என்றும், மேலும் விசாரிக்க எதிரிகள் இருவரும் பாண்டிச்சேரியிலிருந்து குறைவான விலையில் மதுபாட்டில்களை வாங்கிவந்து விசேசங்கள், பார்ட்டிகளுக்கு கொடுப்பதற்காக சுடுகாட்டிற்கு அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்து சாக்குப்

பையில்கட்டியிலிருந்த 750 எம்.எல். கொண்ட ஸ்பீடு பிராந்தி லேபிள் ஒட்டப்பட்ட 169 பாட்டில்களும், கிரீன் மேஜிக் லேபிள் ஒட்டப்பட்ட 1 பாட்டிலும் வைத்திருந்தார்கள் என்றும், எதிரிகள் இருவரும் அவற்றைப் பிரித்து விற்பனை செய்ய எடுத்துச்செல்ல வழிப்போக்கு வாகனத்திற்கு காத்திருந்ததாகச் சொன்னார்கள் என்றும், அனைத்து பாட்டில்களும் மூடி திறந்து மீண்டும் மூடிய நிலையில் இருந்தது என்றும் அதில் 2 பாட்டில்களை எடுத்து நுகர்ந்து பார்த்தபோது நச்சுத் தன்மை நெடிவாடை வந்தது என்றும் இதைக் உட்கொண்டால் உயிருக்கும், உடலுக்கும் ஆபத்து ஏற்படும் என்ற காரணம் கூறி எதிரிகள் இருவரையும் கைது செய்தோம் என்றும் 1–ம் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதை ஆய்வளார் பதிவு செய்தார் என்றும் பொதுமக்கள் யாரும் இல்லாததால் தாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து சான்றுப் பொருட்களைக் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியிலும் தாங்கள் கையொப்பம் செய்தோம் என்றும் மாதிரிக்காக 2 பாட்டில்களை வெள்ளைத் துணியில் கட்டி மதுரை, வட்டார தடய அறிவியலுக்கு அனுப்பினோம் என்றும் 10 மணிக்கு எதிரிகள் இருவருடனும் மற்றும் சொத்துக்களுடனும் நிலையம் வந்தோம் என்றும் குற்ற எண். 378/2018, பிரிவுகள் 4 (1) A, 4 (1) aaa TNP Act படியும் உடனிணைந்த பிரிவு 328 இதச படியும் சார்பு ஆய்வாளர் வழக்குப் பதிவு செய்தார் என்றும் ஆய்வளாருக்கு தாங்கள் உதவியாக இருந்தோம் என்றும் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) அ.சா.3– பேச்சியம்மாள், அவருடைய சாட்சியத்தில், கடந்த 14.12.2018–ம் தேதி செக்காணூரணி காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி கடவுச்சீட்டு பெற்று கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 உசிலம்பட்டி நீதிமன்றத்தில் செக்காணூரணி காவல் நிலைய குற்ற எண். 378/2018 பிரிவுகள் 4(1)(A), 4(1)(aaa) TNP Act மற்றும் 328 இதச–வின் கீழான வழக்கின் சொத்துக்களை ஆர்.பி.ஆர் எண். 532–2018–ன் படி பகுப்பாய்விற்காக நீதிமன்றத்திலிருந்து கொடுக்கப்பட்ட தபாலையும், சொத்துக்களையும் பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகதத்தில் ஒப்படைத்துவிட்டு நிலையம் வந்தேன் என்றும், மேற்படி காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4– சிவநேசன், அவருடைய சாட்சியத்தில், கடந்த 21.11.2018–ம் தேதி செக்காணூரணி காவல் நிலையத்தில் பயிற்சி சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 6.00 மணியளவில் தனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆய்வாளர் அவர்களின் உத்தரவை பெற்று தன்னுடன் இருந்த ஜெயபாண்டி, இளையராஜா ஆகியோர்களுடன் புறப்பட்டு சம்பவ இடமான பாலூத்துப்பட்டி ரோடு வடக்கப்பட்டி சுடுகாடு அருகில் தாங்கள் சென்று மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்த போது மேற்படி இடத்தில் எதிரிகள் இருவரும் அவர்களை பார்த்து ஓட முயன்ற போது, பிடித்து விசாரித்த போது எதிரிகள் இருவரும் முன்னுக்கு பின் முரணாக விலாசங்களை கூறினார்கள் என்றும், மேலும், அவர்கள் அந்த இடத்தில் இருந்ததற்கான முகாந்திரம் கேட்க அதில் 1–வது எதிரி தாங்கள்

பாண்டிச்சேரி சென்று குறைந்த விலைக்கு மது பாட்டில்கள் வாங்கி அதை அதிக லாபத்திற்கு விற்பதற்காக மேற்படி இடத்தில் மேற்படி மதுபாட்டில்களை பதுக்கி வைத்திருப்பதாக கூறினார் என்றும், மேலும், எதிரியை 6.30 மணிக்கு கைது செய்து, 1–வது எதிரியை விசாரிக்க நீவீர் தானாக முன்வந்த எந்தவொரு அச்சுறுத்தல் இன்றி தான் போடியை சேர்ந்தவர் என்றும், கருமாத்தூர் அருகில் உள்ள பாலூாத்துப்பட்டியில் திருமணம் செய்த அங்கேயே தங்கியிருப்பதாகவும், தனக்கு வருவாய் சரியாக இல்லாததால் குடும்பத்தின் ஏழ்மை நிலையை கருதி அவருக்கு தெரிந்த அவரது ஊரைச் சேர்ந்த 2–வது எதிரியாகிய தம்பிராஜ் ஆகிய உம்மை அழைத்து அவரது குடும்ப கஷ்டத்தை கூறிய போது மேற்படி 2–வது எதிரி பாண்டிச்சேரி சென்று அங்கு இனம் தெரியாத நபரிடம் குறைந்த விலைக்கு மது பாட்டில்கள் வாங்கி, அதை சம்பவ இடத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும், எதிரிகள் இருவரும் அதை எடுத்து யாருக்காவது அதிக விலைக்கு விற்கலாம் என்ற விவரத்தை வாக்குமூலமாக கூறினார்கள் என்றும், அவர் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் தாங்கள் மறைத்து வைத்திருக்கும் மது பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார்கள் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை 6.45 மணிக்கு பதிவு செய்தேன் என்றும், அதில் தன்னுடன் இருந்த ஜெயபாண்டி மற்றும் இளையராஜா ஆகியோர்கள் சாட்சிக் கையொப்பம் செய்தார்கள் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 என்றும், பின்னர் 1–வது எதிரி எடுத்து ஆஜர் செய்த 750 எம்.எல் கிரீன் மேஜிக் என்று எழுதப்பட்ட பிராந்தி பாட்டில் ஒன்றும்,

அத்தாட்சி பிறப்பித்து மேற்படி காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன் என்றும், மேற்படி அத்தாட்சி அ.சா.ஆ.2 என்றும், மேற்படி எதிரிகளையும், கைப்பற்றிய சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை (கு.எண். 378–2018 இதச பிரிவுகள் 4(1) (A), 4(1) (aaa) TNP Act படியும் மற்றும் 328 இதச வாக) பதிவு செய்தேன் என்றும் தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் எதிரிகளையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் ஆய்வாளர் அவர்களிடம் ஆஜர் செய்தேன் என்றும் 14.12.2018–ம் தேதி செக்காணுரணி காவல் ஆய்வாளர் சாட்சியமளித்துள்ளார்.

(v) அ.சா.5– காவல் ஆய்வாளர் வனிதா, அவருடைய சாட்சியத்தில், கடந்த 21.11.2018–ம் வருடம் நிலைய சார்பு ஆய்வாளர் சிவநேசன் பதிவு செய்திருந்த மேற்படி காவல் நிலைய கு.எண். 378–2018 இதச பிரிவுகள் 4(1) (A), 4(1) (aaa) TNP Act (Transport) மற்றும் 328 இதச–வின் கீழான முதல் தகவல் அறிக்கையினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளின் கை–தை உறுதி செய்தும், அத்தாட்சி மற்றும் சொத்துக்களை பார்வையிட்டு உரிய பதிவுகள் செய்தும், சாட்சிகள் ஜெயபாண்டியன், இளையராஜா சார்வு ஆய்வாளர் சிவநேசன் ஆகியோர்களை விசாரித்தும் வாக்குமூலம் பெற்றும், எதிரிகளின் கைது பற்றி உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து உரிய பதிவுகள் செய்து எதிரிகளை தக்க வழிகாவலுடன் நீதித்துறை நடுவர் எண்.2, உசிலம்பட்டி அவர்களிடம் அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் அத்தாட்சியில் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம்

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.4 என்றும், பின்னர் கடந்த 13.12.2018–ம் தேதி மேற்படி வழக்கு சொத்துக்களுக்கு ஆர்.பி.ஆர் எண். பெற்றேன் என்றும், மேற்படி வழக்கு சொத்துக்களின் புகைப்பட நகல்கள் (எண்ணம் 2) அ.சா.ஆ.5 என்றும், பின்பு, கடந்த 14.12.2018–ம் தேதி பெண் காவலர் பேச்சியம்மாள் என்பவர் உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து வழக்கு சொத்துக்களை நீதிமன்ற உத்தரவுப்படி பெற்று பகுப்பாய்வு கூடத்தில் ஒப்படைத்த வந்ததவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் பின்னர் 10.01.2019–ம் தேதி ராமச்சந்திரன், ஆய்வக பரிசோதனை அலுவலரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி தடவியல் சான்று அ.சா.ஆ.6 என்றும், பின்னர் தான் பணியிட மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(vi) அ.சா.6– காவல் ஆய்வாளர். அனிதா அவருடைய சாட்சியத்தில், கடந்த 10.09.2020–ம் தேதி செக்காணூரணி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மேற்படி காவல் நிலைய கு.எண்.378–2018 பிரிவுகள் 4(1) (A), 4(1) (aaa) TNP Act மற்றும் 328 இதச–வின் கீழான வழக்கு கோப்பை பார்வையிட்டு தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை செய்ததில் முதல் கட்ட விசாரணை எதிரிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வழக்கின் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, அவற்றை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றும், எதிரிகள் மீது

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்காக புலன் விசாரணையிலிருந்து மேற்படி வழக்கின் சாட்சிகளை தான் விசாரித்த போது முதற்கட்ட விசாரணை அதிகாரியிடம் கூறியது போன்று தன்னிடம் கூறியதால் தான் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்கு மூலங்களிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரிகள் மீது 10.09.2020–ம் தேதி பிரிவுகள் 4(1) (A), 4(1) (aaa) of TNP Act மற்றும் 328 இதச–வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5)** அரசு தரப்பு சாட்சியங்களில் காணப்பட்ட, எதிரிகளுக்கு பாதகமாக உள்ள, அம்சங்கள் குறித்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)–ன் கீழ், எதிரிகளிடம் எடுத்துக்கூறி, வினவியபொழுது, அவர்கள், பொய்சாட்சி என்றும் இவ்வழக்கு குறித்து ஏதேனும் கூறிக்கொள்ள விரும்புகிறீர்களா? என்று வினவிய பொழுது, பொய் வழக்கு என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க, சாட்சிகள் ஏதும் இருக்கிறதா? என்று வினவியபொழுது, இல்லை என்றும் தெரிவித்தார்கள்.

**6) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:–**

அரசு தரப்பால், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? என்பதே ஆகும்.

**7) பிரச்சனைக்குரிய தீர்வு:–**

(i) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. முதலாவதாக, அரசு தரப்பு வழக்கானது, கடந்த 21.11.2018–ம் தேதி காலை 6.30 மணிக்கு செக்காணூரணி காவல் நிலைய எல்கையான கருமாத்தூர்

பாலூத்துப்பட்டி மெயின் ரோட்டில் வடக்கம்பட்டி சுடுகாடு அருகில் TN 59 AF 2765 TVS STAR CITY என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தில் எதிரிகள் இருவரும் 750 ML அளவுள்ள SPEED BRANDY பாட்டில்கள் 169 மற்றும் 750 ML அளவுள்ள GREEN MAGIC BRANDY என லேபில் ஒட்டப்பட்ட பாட்டில் ஒன்றும், மூடி திறந்து மூடிய நிலையில் விஷ நெடியுடன் கூடிய மதுபோன்ற திரவம் நிறைந்த மொத்தம் 127.500 லிட்டர் புதுச்சேரி மாநில மதுபான பாட்டில்களை அதிக லாப நோக்கத்துடனும், மேற்படி திரவத்தை அருந்தினால் மனித உயிருக்கும், உடலுக்கும் தீங்கு விளைவிக்க கூடும் மற்றும் கண்களுக்கு எரிச்சலூட்ட கூடும் என தெரிந்திருந்தும் விற்பனை செய்ய வைத்திருந்து எதிரிகள் 4(1–A), 4 (1) (aaa) TNP Act மற்றும் இ.த.ச. பிரிவு 328–ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்பதாகும்.

(ii) அடுத்ததாக, அரசு தரப்பில் அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், இக்குற்ற வழக்கில் முதல் சாட்சியான சார்பு ஆய்வாளர், கிரேடு 1 முதல்நிலை காவலருடன் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கை செய்ததாகவும், அப்போது எதிரிகளை பிடித்து விசாரித்த போது அவர்களிடம் பிராந்தி பாட்டில்கள் இருந்ததாகவும், மாதிரிக்காக இரண்டு பாட்டில்களை வெள்ளைத்துணியில் கட்டி எடுத்துக்கொண்டதாகவும், அத்தாட்சி தயார் செய்ததாகவும், பின்னர் எதிரிகளை கைது செய்ததாகவும், எதிரிகள் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பின் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1–ன் சாட்சியத்திற்கு ஆதரவாக அ.சா.2–ம் சாட்சியம் அளித்திருக்கிறார்.

(iii) அடுத்ததாக, இதுசம்பந்தமாக கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் வாதிடுகையில், இவ்வழக்கின் சம்பவ இடமானது, கடந்த 21.11.2018−ம் தேதி காலை 6.30 மணிக்கு செக்காணூரணி காவல் நிலைய எல்லையான கருமாத்தூர் பாலூத்துப்பட்டி மெயின் ரோட்டில் வடக்கம்பட்டி சுடுகாடு அருகில் நடந்தது என்பதாகும். பொதுமக்கள் நடமாட்டம் இருந்த பகுதியில் சம்பவம் நடந்தது என்பது அரசு தரப்பு வழக்காகும். ஆனால், பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை. அரசு தரப்பு சான்றாவணங்களான, அத்தாட்சி, பார்வை மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, புள்ளி விவரத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்பதாகும்.

(iv) அடுத்ததாக, இதுசம்பந்தமாக, கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் அ.சா.1−ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது, அ.சா.1−ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை காட்டக்கூடிய வரைபடமோ, மகசரோ ஆய்வாளர் தயார் செய்தாரா என்றால் தயார் செய்யவில்லை. சம்பவ இடத்தில் 1 மணி நேரத்திற்கு மேல் இருந்தோம். எதிரிகள் சாக்கு பையோடு 169 ஸ்பீடி பிராந்தி, 1 கிரீன் பிராந்தி பாட்டில்கள் வைத்திருந்ததை ஊர்ஜிதப்படுத்தக்கூடிய புகைப்படம் எதுவும் அந்த இடத்தில் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை கைப்பட எழுதியது சார்பு ஆய்வாளர்தான். நான் சாட்சிக் கையெழுத்து செய்தேன். தேவராஜ் மற்றும் தம்பிராஜிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டதா என்றால் தேவராஜிடம் மட்டும் தான் வாங்கப்பட்டது. ஒப்புதல்**

**வாக்குமூலத்தில் தம்பிராஜிடம் கையெழுத்து வாங்கவில்லை. சார்பு ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலரையோ, தலையாரியையோ சம்பவ இடத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான்** என அ.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும் போது, சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யவில்லை. அதற்கான விளக்கத்தை அ.சா.1 கொடுக்கவும் இல்லை. இதுசம்பந்தமாக, வழக்கினை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அ.சா.4–டம், கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யும் போது, அ.சா.4–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **காலை சுமார் 6.00 மணிக்கு நிலையத்திலிருந்து மூன்று பேர் தனித்தனி இருசக்கர வாகனத்தில் புறப்பட்டோம்** என சாட்சியம் அளித்திருக்கிறார். இதுசம்பந்தமாக, உடனிருந்த அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் **நாங்கள் மூன்று பேரும் ஒரே வாகனத்தில் சென்றோமோ அல்லது தனித்தனி வாகனத்தில் சென்றோமோ என்றால் சார்பு ஆய்வாளர் ஒரு வாகனத்திலும் நானும் காவலரும் ஒரு வாகனத்திலும் சென்றோம்** என அ.சா.4–ன் சாட்சியத்திற்கு முரண்பாடாக சாட்சியம் அளித்திருக்கிறார்.

(v) அடுத்ததாக, அ.சா.4–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **பாலுத்துப்பட்டி கிராமத்தில் 150 வீடுகள் இருக்குமா என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் சுமார் ஒன்றரை மணி நேரம் இருந்தோம். சம்பவம் சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. அந்த பகுதியை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர், தலையாரி ஆகியோர்களுக்கு தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை. அவ்வாறு பாட்டில்களை**

**கைப்பற்றியபோது புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சம்பவ இடத்தை காண்பிக்க கூடிய வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேனா என்றால் இல்லை** என ஒப்புகொண்டதை பார்க்கும் போது, சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் இடத்தில் எத்தனை வீடுகள் இருந்தது என்பது அ.சா.4–ற்கு ஞாபகமில்லை என கூறுவது ஏற்புடையது அல்ல.

(vi) அடுத்ததாக, எதிரிகளிடம் இருந்ததாக சொல்லப்படும் மது பாட்டில்கள் பாண்டிச்சேரியிலிருந்து வாங்கி வரப்பட்டது என்பது அரசு தரப்பு வழக்காகும். அதில் ஒரு பாட்டில் மூடி திறந்து மூடிய நிலையில் விஷ நெடியுடன் கூடிய மதுபோன்ற திரவம் இருந்ததால் எதிரிகள் 4(1–A), 4 (1) (aaa) TNP Act மற்றும் இ.த.ச. பிரிவு 328–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்திருக்கிறார். இதுசம்பந்தமாக, வழக்கின் புலன் விசாரணை அதிகாரியயிடம் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யும் போது, அ.சா.6–ன் குறுக்கு விசாரணை சாட்சிமானது, **வழக்கு பதிவு செய்யும் போது, விஷ சாராய வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் வழக்கை பதிவு செய்தவர் எதிரிகளை கைது செய்து பாட்டில்களை கைப்பற்றும் போது வாடை வந்தது என்று சொல்லியுள்ளார். என்றால் சரிதான். உயிருக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்று சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்...........சம்பவ இடத்தை காட்டக்கூடிய மகசர் மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஊரில் வசிக்கின்ற எந்த நபரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி அளிக்க முன்வரவில்லை. கிராம நிர்வாக**

**அலவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். விஷ சாராயம் குடித்து ஊர் மக்கள் யாராவது மருத்துவமனையில் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதாக சாட்சியம் பதிவு செய்தேனா என்றால் அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை** என அ.சா.6–ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும் போது, அ.சா.4 நுகர்ந்து பார்த்து எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்படும் பிராந்தி விஷ தன்மையுடைய பிராந்தி என தீர்மானித்து விஷ சாராய வழக்கு பதிவு செய்ததாக கூறுவது நம்பிக்கைக்குரியது அல்ல.

(vii) அடுத்ததாக, எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போது 1–வது எதிரிக்கு காயங்கள் இருந்ததாக நீதித்துறை நடுவர் எண். 2 உசிலம்பட்டி அவர்கள் நீதிமன்ற காவல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். மேற்படி காயம் 1–வது எதிரியை கைது செய்த போது இருந்ததாக அ.சா.4 நீதிமன்ற அறிக்கையில் தெரிவிக்கவில்லை. அரசு தரப்பு வழக்கின் படி எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளை கண்டவுடன் ஓடியதாக அரசு தரப்பு வழக்கில் இல்லை. ஆக, நின்று கொண்டிருந்த எதிரிகளை அரசு தரப்பு சாட்சிகள் கைது செய்தது தான் அரசு தரப்பு வழக்காகும். ஆக, 1–ம் எதிரியை துன்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதாக தெரிய வருகிறது. சம்பவ இடத்தை காட்டும் வரைபடம், பார்வை மகசர் எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் மது பாட்டில்கள் ஆகியவற்றை புகைப்படம் எதுவும் எதுக்காமல், பொது மக்கள் யாரும் சாட்சியாக விசாரிக்காமல் அரசு தரப்பு சான்றாவணங்களை கைப்பற்றி அழித்ததாக

கூறுவது ஏற்புடையது அல்ல. அரசு தரப்பு சாட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்படுவதை பார்க்கும் போது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை எழுப்புகிறது. எனவே, அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று, இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே, இந்த பிரச்சனைக்கு, அரசு தரப்பிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, எதிரிகள் 4(1-A)-கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டிலிருந்து எதிரிகளை, கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில், ஆர்.பி.ஆர்.எண். **3/2024**-ல் கண்ட, அ.சா.5 சான்றாவணம் The Hon'ble Madurai Bench of Madras High Court, Suo Moto WP 6126/20, dated 30.04.2020, உத்தரவின்படி 28.05.2020-ல் திராவகம் கொட்டி அழிக்கப்பட்டதற்கான புகைப்படம் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாவிட்டால் கட்டுடன் இணைத்து வைக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் நாள், என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.02 15:30:24 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**1) அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ஜெயபாண்டியன் |
| அ.சா.2 | திரு. இளையராஜா |
| அ.சா.3 | திருமதி. பேச்சியம்மாள் |
| அ.சா.4 | திரு. சிவனேசன் |
| அ.சா.5 | திருமதி. வனிதா |
| அ.சா.6 | திருமதி. வனிதா |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.2 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | படிவம் 91 |
| அ.சா.ஆ.5 | பாட்டில் புகைபடங்களின் எண்ணிக்கை 2 |
| அ.சா.ஆ.6 | தடவியல் அறிக்கை |

**4) எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:–**

– இல்லை –

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.02 15:30:32 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**<u>இணைப்பு 1:–</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் பொழுது, எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) சாட்சிகள் எவரும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3) தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

உதவி அமர்வு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

அமர்வு வழக்கு எண்.96/2021

02.04.2026

தீர்ப்புரை